## ஆழத்து முத்துக்கள் 43

# அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜா

### சொந்த மண்ணில் வாழ்ந்து பணியாற்றும் அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜா.

நாட்டுக்கூத்து மற்றும் நாடகங்கள் எமது தமிழ் மக்களின் பாரம்பரிய சொத்து. இவற்றை அழியவிடாது பாதுகாத்து இளைஞர்கள் யுவதிகள் மட்டில் பழக்கி யாழ் திருமறைக் கலா மன்றத்திலும் மற்றும் பல கிராமங்களிலும் பாடசாலைகளிலும் தொடர்ந்து ஆர்வத்துடன் செயற்பட்டு வருபவர் அண்ணாவியார் அ.பேக்மன் ஜெயராஜா அவர்கள்.

21-10-1945ல் பிறந்த இவர் தமது 24ம் வயதில் அதாவது 1969ம் ஆண்டு அண்ணா வியார் திரு. வின்சன் டி. போலின் நெறியாள்கையில் ‘சஞ்சுவாம்’ நாட்டுக்கூத்தில் நடித்தபோது இவரது குரல் வளத்தை அவதானித்த மறைந்த அண்ணாவியார் கலாநிதி பூந்தான் யோசேப்பு அவர்கள் ‘கருங்குயில் குன்றத்துக்கொலை’ என்னும் நாட்டுக்கூத்தில் பிரதான பாத்திரத்தை ஏற்று நடிக்கும்படி கேட்டுக்கொண்டார். அதன்பின்பு யாழ். நவரச நாட்டுக்கூத்துக் கலா மன்றத்தின் உதவிச் செயலாளராக இணைந்து அன்றைய நாட்களில் நாட்டுக்கூத்தில் பிரபல்யமாக இருந்த அண்ணாவிமார்கள் கலாநிதி பூந்தான் யோசேப்பு, பக்கிரி சின்னத்துரை, சாமிநாதர் குணசிங்கம், பாவிலுப்பிள்ளை, இராசாதம்பி, அந்தோனிப்பிள்ளை சுவாம்பிள்ளை, வின்சன் டி போல், பெலிக்கான், செல்வம், நாரந்தனை அருளப்பு, மயிலிட்டி மனப்பு மற்றும் பலருடன் சேர்ந்து இணையாகப் பாடி நடித்துப் பாராட்டுக்களைப் பெற்றார் அது மட்டுமல்ல கொழும்புத்துறையில் நடிக்கப்பெற்ற ‘சங்கிலியன்’ என்னும் நாட்டுக்கூத்தில் அப்பொழுது யாழ்.மறைமாவட்ட ஆயராக இருந்த அதிவண, தியோகுப்பிள்ளை ஆண்டகையால் ‘இசைக்குயில்’ என்ற பட்டம் வழங்கப்பட்டு பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்பட்டார்.

அண்ணாவியார் கலாநிதி பூந்தான் யோசேப்பு காலமாகிய பின்பு நாட்டுக்கூத்தை அழியாது பாதுகாக்க வேண்டும் என்ற நோக்கத்தோடு தனது நண்பர் நடிகர் பிரான்சிஸ் ஜெனம் அவர்களுடன் சேர்ந்து யாழ். நவரச நாட்டுக்கூத்துக் கலா மன்றத்தை நடாத்திவந்தார். அத்துடன் மேலே கூறப்பட்ட அண்ணாவிமார்களை அழைத்து தேவசகாயம்பிள்ளை, எஸ்தாக்கியார் போன்ற நாடகங்களை மேடையேற்றி மக்களின் பாராட்டுக்களைப் பெற்றார்.

அத்துடன் நின்றுவிடாது யாழ். மாவட்டத்திலும், வன்னி, வவுனியா மாவட்டங்களிலும் ஒவ்வொரு கிராமமாக (சில்லாலை, மயிலிட்டி, ஒட்டகப்புலம், வசாவிளான், அச்சுவேலி, பலாவி, தாளையாடி, கிளிநொச்சி, வவுனியா போன்ற இடங்களுக்கு) சென்று பல கலைஞர்களையும் இளைஞர்களையும் யுவதிகளையும் இணைத்து பல நாட்டுக்கூத்துக்களைப் பழக்கி மேடையேற்றினார்.

அந்நாட்களில் இலங்கை வானொலியில் நாட்டுக்கூத்துப் பொறுப்பாதிகாரியாயிருந்த திரு.வீ.ஏ. சிவஞானம் அவர்களின் வேண்டுகோளுக்கிணங்க பல நாட்டுக்கூத்துக் கலைஞர்களை அழைத்துச்சென்று கொழும்பில் உள்ள இலங்கை வானொலியில் ஒலிப்பதிவு செய்ய உதவிபுரிந்தார்.



1988ம் ஆண்டு முதல் யாழ்.திருமறைக் கலா மன்றத்தில் இணைந்து ‘நீ ஒரு பாறை’ ‘அனைத்தும் அவரே’ ‘தேவசகாயம்பிள்ளை’, ‘எஸ்தாக்கியார்’, ‘இரத்தக்கடன்’ போன்ற பல கூத்துக்களில் முக்கிய பாத்திரமேற்று நடித்ததுமல்லாமல் தனது நண்பர் பாஷையூர் பாலதாஸ் அவர்களுடன் சேர்ந்து பல கூத்துக்களை நெறிப்படுத்தியதையும் இவர் நினைவு கூறுகிறார். யாழ்.திருமறைக் கலா மன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ.மரிய சவரி அடிகளாரின் வேண்டுகோளுக்கு இணங்க பல நாடகங்களில் நடித்ததுமல்லாமல் ஒப்பனைப் பொறுப்பாளனாகவும் கடமை யாற்றி இவர் பல பெண்களுக்கு நாட்டுக் கூத்தில் ஆர்வத்தினை ஏற்படுத்தி, நடிக்கும் வாய்ப்பினையும் உருவாக்கி உதவிபுரிந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தால் வருடா வருடம் மேடையேற்றப்படும் இயேசுவின் திருப் பாடுகள் காட்சிகள் பழமைவாய்ந்த ‘சிந்தாகுலத்திரட்டு’, ‘பஞ்சவர்ணத்தூது’, ‘பேரின்பக் காதல்’ போன்ற புத்தகத்திலுள்ள ஒப்பாரி இராகத்தைப் பாடி ‘காட்சியும் கானமும்’ என்ற பெயரில் மேடையேற்ற உதவி புரிந்தார்.

இவர் சிறீலங்கா ரெலிகொம் நிறுவன ஊழியராக கடமையாற்றிய போதும் வார இறுதி நாட்களிலும், மற்றும் விடுமுறை நாட்களிலும் தனது குடும்பப் பொறுப்புகளோடு தனது நேரத்தை கலைப் பணிக்காகவே மிக அர்ப்பணிப்புடன் செலவு செய்வது பாராட்டத்தக்கது.

1997ம், 1998ம் ஆண்டுகளில் திருமறைக் கலாமன்றம் ‘வடலிக்கூத்தர்’, ‘கலைப்பயணம்’ என்ற பெயரில் பிரான்ஸ், ஜேர்மனி, லண்டன், நெதர்லாந்து, சுவிஸ், இத்தாலி, போன்ற நாடுகளுக்கு கலைப்பயணம் சென்றபோது அப்பயணத்தில் இணைந்து நாடகங்களில் நடித்து அதிக அனுபவத்தினைப் பெற்றதாகவும் இவர் குறிப்பிடுகிறார்.

கூத்துக்களில் மட்டுமன்றி யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் பலிக்களம் என்னும் யேசுவின் திருப்பாடுகளின் நாடகத்தில் ‘அன்னாஸ்’ பாத்திரமாகவும் ‘ஜீவப்பிரயத்தனம்’ என்னும் நவீன நாடகத்தில் ‘யாழ்’பாடியாகவும்’ ‘ஒற்றுமையே பலம்’ என்னும் சிறுவர் நாடகத்தில் முக்கிய பாத்திரத்தையும் ஏற்று நடித்ததைப் பெருமையுடன் நினைவு கூறுகிறார்.

யாழ்.திருமறைக் கலாமன்றத்தின் இளம் எழுத்தாளர்கள் நடிகர்களாகிய ஜோன்சன் ராஜ்குமார் சாம் பிரதீபன் ஆகியோரை ஊக்கப்படுத்தி அவர்களைக்கொண்டு ‘சோழன் மகன்’ ‘கம்பன் மகன்’ போன்ற நாட்டுக் கூத்துக்களை அச்சேற்றுவதில் முக்கிய பங்காற்றினார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இவரது கலைப் பணியைப் பாராட்டி 2005ம் ஆண்டு யாழ்.திருமறைக் கலாமன்றம் ‘கலைஞானபூஷணன்’ என்னும் பட்டத்தையும் 2006ம் ஆண்டு யாழ்.பிரதேச செயலகம் ‘யாழ்இரத்தினா’ என்ற விருதையும் வழங்கிக் கௌரவித்தது.

இறுதியாக இக்கலைஞருடைய வாழ்க்கையில் மறக்கமுடியாத நாளாக கடந்த 14-12-2010ம் நாள் அமைந்தது. கொழும்பில் நடந் தேறிய கலைஞருக்கான பாராட்டு விழாவில் இவருக்கு ‘கலாபூசணம்’ என்றும் விருது வழங்கப்பட்டுப் கௌரவிக்கப்பட்டார்.

நாடகத்தையும் நடித்து, யாழ் மக்களின் மரபுவழிக்கலை ஒரு போதும் அழியவிடக் கூடாது என்று முனைப்புடன் தொடர்ந்து செயற்படும் இவர் பாராட்டப்பட வேண்டியவரே.

### எனதுதொடர்பு:

1982ல் தான் இவருடைய தொடர்பு எனக்கு யாழ் நகரில் ஏற்பட்டது. அன்றைய நாளிலிருந்து இவரது கலையார்வத்தையும் நடிக்கும் திறனையும் பற்றி யாழ். திருமறைக் கலாமன்ற இயக்குனர் அருட்கலாநிதி நீ. மரியசவரி அடிகளார் இவரை அறிமுகப் படுத்தி எடுத்துக்கூறிய வார்த்தைகள் இன்னும் எனது மனதில் பதிந்திருக்கிறது. அதன் பயனாகத்தான் இவரும் திருமறைக் கலாமன்றத்தில் இணைந்து கலை ஆர்வத்தையும் ஆற்றலையும் வெளிக்கொணர வாய்ப்பு ஏற்பட்டது என நினைக்கிறேன்.

இவருடன் சக நடிகர்களாக நடித்த நாட்டுக் கூத்து நடிகர்கள் சிலர் இன்று உயிருடன் இல்லை என்பது மிகக் கவலைக்குரிய விடயம் என்றாலும் ஒரு சில இளம் கலைஞர்கள் யாழ்.திருமறைக் கலாமன்றத்திலும் கொழும்புக்கிளையிலும் இன்றைய காலகட்டத்திலும் இணைந்து செயற்பட்டு வருகிறார்கள் என்பதை அறியக்கூடியதாக இருக்கிறது. இவர்களில் கலைஞர்களான பேர்மினஸ், தைரியநாதன், விஜயன் (ஆசிரியர்) என்பவர்கள் குறிப்பிடத் தக்கவர்கள்.

நான் கனடாவிற்குப் புலம் பெயர்ந்தபின் கனடா திருமறைக் கலா மன்றத்தின் செயலாளராக 1996ம் ஆண்டு தொடக்கம் 2004ம் ஆண்டுவரை கடமையாற்றிய போது இக் கலைஞர்களுடனும் இயக்குனர் அருட்கலாநிதி மரியசவரி அடிகளாருடனும் தொடர்புகள் இருந்தன.

தற்போது சற்று ஓய்ந்து இருந்தாலும் இவர்களைப் பற்றியும் இவர்களின் செயற்பாடுகள் பற்றியும் அறியும் வாய்ப்புகள் இருக்கின்றன என்பதைக்குறிப்பிடுவதுமல்லாமல் தொடர்ந்தும் கனடா திருமறைக்கலா மன்ற உறுப்பினராக எனது பங்களிப்பைச் செய்து வருவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

நான் ஏற்கனவே குறிப்பிட்ட கலைப் பித்தர்கள் எம் மண்ணில் வாழும்வரை எமது மக்களின் பாரம்பரிய கலை கலாச்சாரம் என்றும் அழியாது பேணிப் பாதுகாக்கப்படும் என்பது எனது அசையாத நம்பிக்கை.

- ஆர்.எல். சேவியர் -



xavier.raphael@thaiveedu.com

■ ■ ■

கலைஞர்கள் பற்றிய விபரங்களையும் அவர்களுடைய புகைப்படங்களுடன் உங்களுடைய பெயர், தொலைபேசி இலக்கம், புகைப்படம் மற்றும் மின்னஞ்சல் முகவரியையும் தாய்வீட்டிற்கு அனுப்பிவையுங்கள்.

**Editor**
**P.O.Box #63581**
**Woodside Square**
**1571 Sandhurst Cir.**
**Toronto, ON. M1V 1V0**

**Fax : 416.849.0594**
**E-mail : info@thaiveedu.com**

■ ■ ■

இணையத்தளத்திலும் ‘தாய்வீடு’

www.thaiveedu.com